# உள்ளம் உரை செயல்

புதுஅக்ரஹாரம் எஸ்.பார்த்தசாரதி, பெங்களூர்

*1998* மார்கழிமாதம் பெங்களூர்வாழ் நிறைய திருநாமங்களுக்கு வாழ்வில் திருப்புமுனையைத் தந்தது. அஹோபிலபட *45*-ம் பட்ட வில்லிவலம் அழகியசிங்கர் பெங்களூரில் திருப்பாவை உபந்யாசம் செய்தார். அப்போது ஸ்ரீ உ.வே.பழவேரி ஸாரஸாரஜ்ஞர் ஸ்வாமியை அறிமுகப்படுத்தி இவரிடம் காலக்ஷேபம் செய்து ஜ்ஞானத்தை வளர்த்துக்கொள்ளுங்கள் என்றார். அதன்படி ஸ்ரீமான் திரு கே. நாராயணன் (வைகுண்டவாசி) வழிகாட்ட நாங்கள் ஒரு இருபந்தியைந்து பேர் ஸ்வாமியிடம் பகவத்விஷயம் காலக்ஷேபம் தொடங்கினோம்.

ஒரு ஞாயிற்றுக்கிழமை ஸாயங்காலம், காலக்ஷேபம் முடிந்தவுடன், **உமக்கு நேரமிருந்தால் நாம் ஒருவரைச் சந்திக்கலாம். அருகில்தான் மஞ்சுநாத நகரில் இருக்கிறார். லௌகீகப் படிப்பு, வைதீகப்-படிப்பு இரண்டிலும் ஆழங்கண்டவர். ஒரு பலசரக்குக்கடை. நான் அறிமுகப்படுத்துகிறேன் வருகிறீரா?** என்று நாராயணன் ஸ்வாமி கேட்க, எம்பெருமானின் அருளால் உடனே நான் சரியென்று சொல்ல, ப்ரகாஷ் நகர் கோயிலிலிருந்து பக்கத்திலுள்ள மஞ்சுநாதநகருக்குச் சென்றோம். **இவர்தான் இராமானுஜன், *C-DAC* இராமானுஜன் என்றால் எல்லாருக்கும் தெரியும்** என்று சொல்லி என்னையும் அறிமுகப்படுத்தி வைத்தார். ஸ்வாமி அப்போது தாம் தந்தையாரிடம் வேதத்தையும், ப்ரபந்தத்தையும் பாரம்பர்ய முறையில் கற்றுக்கொண்டது; இஞ்சினியரிங் சேர்ந்து படித்தது; *HAL*-லில் வேலை பார்த்தது. ஷிப்டில் அனுஷ்டானம் கெடாமல் பார்த்துக்கொண்டது; *C-DAC*-ல் சேர்ந்து அங்கு அவர் செய்து கொண்டிருக்கும் விஷயங்கள் என அவர் விரிக்க விரிக்க நான் ப்ரமிப்பின் உச்சத்திற்குச் சென்றேன். அவர் சொன்ன விஷயங்கள் சில மண்டைக்குள்ளும் பல மண்டைக்கு மேலேயும் சென்றது. (இன்றும் அப்படித்தான் இருக்கின்றது என்பது வேறுவிஷயம்). அவர் சொன்ன அத்தனையும் ஒரு ஆயுட்காலத்தில் முடிக்க முடியுமா என்ற வியப்பும் விரிந்தது. அவர் சொன்ன ஒரு விஷயம் நெஞ்சில் நின்றது. வரும் சந்ததியினரிடத்து நம் மூதாதையரின் வேதவேதாந்த ஞானத்தைக் கொண்டு சேர்ப்பதுமுக்கியம் என்பது.

இப்படிச்சொன்னவர் தான் தன் தந்தையார் பெயரில் ஒரு ட்ரஸ்ட் ஆரம்பித்திருப்பதாகவும் அதில் இவ்வனைத்தையும் செய்யப்போவதாகவும் சொன்னார். இப்படி உள்ளத்தில் தோன்றியதை ட்ரஸ்ட்டில் செய்யவேண்டிய பணிகளாக உரைத்தார். இவையிரண்டும் இதுமாதிரி பல என்றுதான் சொல்லும்படியாக இருந்தது. இவ்வளவுதான் என்று முடிக்கமுடியாததாக இருந்தது. அப்பொழுதே நம் பாரதத்தின் வித்யாஸ்தானங்களில் இருக்கும் நூல்களை டிஜிடலாக்கி, ஒவ்வொருபதத்தையும் (ஆங்கிலபதங்களைத் தேடுவதைப்போல, இந்திய மொழிகளில் இருக்கும் பதங்களைக் குறிப்பாக ஸ்வரத்துடன் இருக்கும் வைதிகபதங்களைத்) தேடும் ஸௌகர்யத்தையும் ஏற்படுத்த வேண்டும் என்ற தீர்மானமான எண்ணமும் அவரிடம் இருந்தது. நம் பாரம்பர்யத்தைக் காக்க வேண்டுமென்றால் வேருக்கு நீர் வார்க்க வேண்டும். வருங்காலம் ஞானத்தோடு வாழக் குழந்தைகளுக்கு வகையாகச் சொல்லித்தரவேண்டும் என்று சொன்னார்.

இதுவும் அடியோங்கள் பராஶரகுருகுலம் ஆரம்பிப்பதற்கு ஒரு தூண்டுகோலாக இருந்தது என்றால் மிகையாகாது. ஞானத்தைச் சிறுவயதுமுதலே குருகுலம் மாதிரி ஒருவிடத்தில் மாணாக்கன் தங்கிப் படிக்கவேண்டும் என்ற அவரது ஆழ்ந்த கருத்து. குருகுலத்திற்கு வரும் வித்யார்த்திகளுக்கும் நாங்கள் ஸ்வாமியை உதாரணம் காட்டி அவர்களை ஊக்கப்படுத்துவதற்குத் தவறுவதே இல்லை.

அன்று தன் உள்ளத்தில் தோன்றியதை ட்ரஸ்டில் செய்யப்போகிறோம் என்று உரைத்தார். அந்த ட்ரஸ்ட் தொடங்கி *25* ஆண்டுகளில் பல விஷயங்களைச் செய்து முடித்திருக்கிறார். பல விஷயங்களைத் தொடர்ந்து செய்துகொண்டிருக்கிறார். அவ்விஷயங்களெல்லாம் கண்டிப்பாக செய்துமுடிப்பார் என்பதிலும் ஐயம்

இல்லை. இவ்வளவும் சாத்தியமாவது உள்ளம் உரை செயல் இம்மூன்றும் ஒன்றை நோக்கியே இருப்பதால்.

அடியேனால் ட்ரஸ்ட் காரியங்களுக்கு அதிக ப்ரயோஜனம் இல்லாவிட்டாலும் அடியோங்களுடைய குருகுலத்தில் படித்த அடியேனின் குமாரன் சிரஞ்சீவி. அநிருத்தன் ஸ்வாமியோடு சேர்ந்து, அணில் இராமனுக்கு உதவியதுமாதிரி, ஒரு பெரும் பணியில், ஒரு சிறு துளி கைங்கர்யம் செய்வது நிறைவைத்-தருகிறது.

ட்ரஸ்ட் மேன்மேலும் வளர்ந்து, ஸ்வாமி உள்ளத்தில் கொண்டு, உரைத்த பற்பல முடிக்கவேண்டிய கைங்கர்யங்களை செவ்வனே முடிக்க அழகியசிங்கர் மற்றும் மாலோலன் திருவடிகளில் ப்ரார்த்திக்கிறேன்.

*(அடியோங்கள் போன்ற பல திருநாமங்களுக்கு ட்ரஸ்டின் நடவடிக்கையாக ஸாதித்துவருகின்ற பல காலக்ஷேபங்களை இங்கு விரிக்கவில்லை. அதுவே ஒரு தனிக்கட்டுரையாக விரியும். தாஸன்.)*

*Sri S. Parthasarathy is a trustee of PIVS and also the founder director of Good Earth Group of Companies, Bangalore. An ardent disciple of Sri Ahobila Mutt, he has had Sampradaya kalakshepams under HH 45th jeer of Sri Ahobila mutt, Sarasarangyar Sri U.Ve. Pazhaveri Rajagopalachariyar Swamy and Sri U.Ve. Sohattur Ramanujachar Swamy. Presently undergoing kalakshepams under Sri U.Ve. Pattanna Swamy, and Sri U.Ve. Pazhaveri Lakshminarasimhachariyar Swamy. He contributes articles to Sri Narasimhapriya (Tamil) and Vainavan Kural magazines regularly.*